# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2033/10 - 2017 අගෝස්තු මස 22 වැනි අඟහරුවාදා - 2017.08.22

*2033/10 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (xvi)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

*2017, ஓகத்து 17.*

**கட்டளைச் சட்டம்**

*1.* இக்கட்டளைச் சட்டம் 2017 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, மனித வள மேம்பாட்டு நிறுவகம் (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் மேல் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

*2.* 2006 ஆம் ஆண்டு யூன் 22 ஆந் திகதிய 1450/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டம் மூலம் கடைசியாக திருத்தப்பட்டவாறான, 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 26 ஆந் திகதிய 68/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, மனித வள மேம்பாட்டு நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகிறது :-

(1) அதன் பந்தி 6 இல் -

(i) அதன் விடயங்கள் (இ) மற்றும் (ஈ) இனை நீக்கிவிடுவதன் மூலமும் அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-

"(இ) அங்கீகரிக்கப்பட்ட கற்கைக் கிளைகளில் அளிக்கப்பட வேண்டிய பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் தீர்மானித்தல்;

*(ஈ) அங்கீகரிக்கப்பட்ட கற்கைக் கிளைகளில் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் தேர்வுகளை நடாத்துதலும், அத்தகைய தேர்வுகளில் சித்தியடைந்தும், நிறுவகத்துடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத் துணை விதிகளால் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளையும் திருப்திப்படுத்தியுள்ள ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விச் சிறப்புகளை அளிப்பதற்கு தகவுடையவராவார்கள் என பல்லைக்கழகத்துக்கு விதந்துரைத்தல்.".*

*(2) அதன்பந்தி 13 இல் -*

(i) *அதன் உப்பந்தி (2) இன் விடயம் (இ) இனை நீக்கிவிடுவதன் மூலமும் அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-*

*"அங்கீகரிக்கப்பட்ட கற்கைக் கிளைகளில் அளிக்கப்பட வேண்டிய பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விச் சிறப்புகளையும் அத்தகைய பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விச் சிறப்புகளுக்கு தகைமை பெற விரும்பும் மாணவர்களால் பின்பற்றப்பட வேண்டிய கற்கை நெறிகள் மற்றும் பயிற்சி, சித்தியடைய வேண்டிய தேர்வுகள் மற்றும் திருப்திப்படுத்த வேண்டிய வேறு நிபந்தனைகளையும் சம்பந்தப்பட்ட சபை அல்லது கற்கைச் சபையுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல்;";*

*(3) அதன் பந்தி 17 இல் -*

(i) *அதன் உப்பந்தி (2) இன் விடயம் (எ) இனை நீக்கிவிடுவதன் மூலமும் அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-*

*"அக்கற்கைக் கிளையில் விதித்துரைக்கப்பட்ட தேர்வுகளில் சித்தியடைந்தவராயும் விதித்துரைக்கப்பட்ட வேறு நிபந்தனைகளை திருப்தி செய்தவராயும் அக் கிளையில் பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விச் சிறப்புகள் அளிக்கப்படுவதற்கு தகவுடையவரான ஆட்களை கூட்டவைக்கு விதந்துரைத்தல்;".*

*9-41*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.